பொருளடக்கம்

❄

தம்பதியரிடம் நிகழ்கிற பெரும்பாவங்கள் 11

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு *13*

முன்னுரை *15*

1 கணவன் செய்த உபகாரத்தை மறுப்பது *21*

2 மனைவி தன் கணவனின் படுக்கை விரிப்பை விட்டும் விலகிக்கொள்வது *24*

3 உடலுறவின் இரகசியங்களைப் பரப்புவது *28*

4 மனைவிகள் மாதவிடாயில் இருக்கும்போது உறவுகொள்வது *31*

5 மலத்துவாரம் வழியாக மனைவியை உறவுகொள்வது *34*

6 மனைவி தன் கணவனுக்கு பிறக்காத குழந்தையை அவனுக்குப் பிறந்ததாகக் கூறுவது *38*

7 மனைவிக்குக் கொடுத்த மஹ்ர் – மணக்கொடையை அநியாயமாகப் பிடுங்கிக்கொள்வது *41*

8 மார்க்கரீதியான எந்த தக்க காரணமும் அன்றி ஒரு பெண் தன் கணவனிடம் குல்உ வேண்டுவது – அவள் தன் பொருளைக் கொடுத்து விவாகரத்துக் கேட்பது; அல்லது வெறுமனே விவாகரத்துக் கேட்பது *44*

9 மனைவிகளுக்கிடையே நீதமின்றி நடப்பது *46*

10 சாபமிடுவது *49*

11 சுற்றுலாவுக்காக இறைமறுப்பு பிரதேசங்களுக்குப் பிரயாணம் செய்வது *53*

12 சூனியம் செய்வது *56*

மகிழ்ச்சியான இல்லம் 61

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு *63*

முன்னுரை *67*

1 திருமண வாழ்க்கை அன்பின்
அடிப்படையில் கட்டமைக்கப்படுதல் 69

2 கணவன், மனைவி தொடர்பின் அடிப்படை 70

3 இஸ்லாமியக் குடும்பத்தின் தூண்கள் 71

4 குடும்ப வாழ்க்கையைப் பாதுகாப்பதில்,
நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதில் கணவனின்
பங்கு 74

5 குடும்ப வாழ்க்கையைப் பாதுகாப்பதில், நல்ல முறையில்
வாழ்க்கை நடத்துவதில் மனைவியின் பங்கு 77

முடிவுரை 79

கணவர் மனைவி முரண்பாடுகள் 81

முன்னுரை 83

1 கணவன் மனைவிக்கு இடையேயுள்ள பிரச்சினைக்கான
காரணங்கள் 85

2 கணவன் மனைவிக்கு இடையேயான பிரச்சினைகளைத்
தீர்ப்பதற்கான வழிகள் 88

1

முதல் பெரும்பாவம்

கணவன் செய்த உபகாரத்தை மறுப்பது

❄

கணவன் மனைவிக்கிடையேயான தொடர்பு வெறுமனே உலக ரீதியான தொடர்பும், விலங்கினத்தின் இச்சையைத் தீர்த்துக்கொள்கிற தொடர்பும் அல்ல. அது சங்கையான, உயிரோட்டமான தொடர் பாகும். இந்தத் தொடர்பு சீர்பெற்று, இருவருக்கும் இடையேயான இணைப்பு உண்மையாக இருந்தால், மரணத்திற்குப் பின் மறுஉலக வாழ்வு வரை அது நீடித்திருக்கும். அல்லாஹ் கூறுகின்றான்:

جَنَّاتُ عَدْنٍ يَدْخُلُونَهَا وَمَنْ صَلَحَ مِنْ آبَائِهِمْ وَأَزْوَاجِهِمْ وَذُرِّيَّاتِهِمْ

நிலையான சுவர்க்கச்சோலைகளில் இவர்களும், நன்னடத்தை யுடைய இவர்களுடைய தந்தைகளும், இவர்களுடைய மனைவி களும், இவர்களின் சந்ததிகளும் நுழைந்துவிடுவார்கள். *(13:23)*

وَالَّذِينَ آمَنُوا وَاتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُمْ بِإِيمَانٍ أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களின் சந்ததிகளில் எவர்கள் தங்கள் பெற்றோர்களைப் பின்பற்றி நம்பிக்கைகொள்கின்றார் களோ (அந்தச் சந்ததிகளின் நன்மைகள் குறைவாக இருந்தும் அவர்களின் பெற்றோர்கள் திருப்தியடையும் பொருட்டு) அவர்களுடைய சந்ததிகளையும் அவர்களுடன் (சுவர்க்கத்தில்) சேர்த்துவிடுவோம். (குர்ஆன் *52:21*)

நன்முறையில் குடும்பம் நடத்துவது இந்தத் தொடர்பைப் பேணிப் பாதுகாப்பதாகும். கணவனுக்குப் பிடித்தமான, பிடிக்காத அனைத் தையும் மனைவி அறிந்து வைத்திருந்தால்தான் குடும்பத் தொடர்பு நன்முறையில் அமையும். இதில் உள்ளதே கணவனின் சிறப்பை யும், அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் மனைவி ஒப்புக்கொள்வதாகும். அவள் அவ்வாறு இல்லாது கணவன் செய்த

3

மூன்றாவது பெரும்பாவம்

உடலுறவின் இரகசியங்களைப் பரப்புவது

❄

ஓர் ஆண் தன் மனைவியோடு தனிமையில் இருந்ததையும் வெளியே சொல்வதற்கு அருவருப்பாக உள்ள நிலைமையைப் பற்றியும் அடுத்தவர்களிடம் கூறக் கூடாது. அவற்றில் எதைப் பற்றியாவது பேசி, வெளிப்படுத்தி விட்டால், தன்னுடைய வும் மனைவியுடையவும் மறைவான விசயங்களை வெளிப் படுத்திவிட்டதாக ஆகிவிடும். ஏனெனில், அவ்விசயங்களை அவன் வெளியே சொல்லும்போது கண்கூடாகப் பார்ப்பதற்கும் செவிவழியாகக் கேட்பதற்கும் எந்த வித்தியாசமும் இல்லாது போய்விடும். கணவன் மனைவிக்கிடையே நடந்த உறவு சம்பந்த மான விசயங்களைப் பரப்புவது மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட விசயமாகும். குறிப்பாக நபிமொழிகள் அது பெரும்பாவம் என அறிவிக்கிறது. அந்நபிமொழிகளில் சில பின்வருமாறு:

1. மறுமைநாளில் அல்லாஹ்விடம் மக்களில் மிகத் தீயவன்

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஸயீதுல் குத்ரீ ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

إِنَّ مِنْ أَشَرِّ النَّاسِ عِنْدَ اللهِ مَنْزِلَةً يَوْمَ الْقِيَامَةِ الرَّجُلَ يُفْضِي إِلَى امْرَأَتِهِ وَتُفْضِي إِلَيْهِ ثُمَّ يَنْشُرُ سِرَّهَا

கணவனும் மனைவியும் பரஸ்பரம் தாம்பத்திய உறவில் ஈடுபட்டு பின்னர் மனைவியின் (தாம்பத்திய) இரகசியத்தை (பிறரிடம்) பரப்புகின்ற மனிதனே அல்லாஹ்விடம் மறுமைநாளில் தகுதியால் மிகவும் மோசமானவன் ஆவான். (முஸ்லிம் 1437)

அல்லாஹ் தன் வேதத்தில் பின்வருமாறு கூறுகிறான்:

4

நான்காவது பெரும்பாவம்

மனைவிகள் மாதவிடாயில் இருக்கும்போது உறவுகொள்வது

❄

பெண்களின் மாதவிடாய்க் காலங்களில் அவர்களை விட்டும் விலகியிருக்க அல்லாஹ் உத்தரவு பிறப்பித்துள்ளான். அல்லாஹ் தன் வேதத்தில் கூறுகிறான்:

وَيَسْأَلُونَكَ عَنِ الْمَحِيضِ قُلْ هُوَ أَذًى فَاعْتَزِلُوا النِّسَاءَ فِي الْمَحِيضِ وَلَا تَقْرَبُوهُنَّ حَتَّىٰ يَطْهُرْنَ

(நபியே!) மாதவிடாய் பற்றியும் உம்மிடம் கேட்கின்றார்கள். நீர் கூறுவீராக: 'அது (அசுத்தமான) ஓர் இடையூறு. எனவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களைவிட்டு விலகி, அவர்கள் சுத்தமாகின்ற வரை அவர்களை அணுகாதீர்கள்.' (குர்ஆன் 2:222)

அது அசுத்தமான ஓர் உபாதையாக இருப்பதால்தான் அல்லாஹ் அந்தச் சந்தர்ப்பத்தில் நெருங்கக் கூடாது என தன் அடியார்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளான். ஆகவேதான் அல்லாஹ், 'எனவே, மாதவிடாய்க் காலத்தில் பெண்களைவிட்டு விலகியிருங்கள்' என்பதாகக் கூறுகிறான். இந்த இடத்தில் வந்துள்ள 'மஹீள்' என்ற பதத்திற்கு மாதவிடாய் வருகின்ற இடம், மாதவிடாய்க் காலம் என்பதாக இரண்டு விதமான பொருள்களும் எடுத்துக்கொள்ளலாம். இடம் என்பதாகப் பொருள் கொண்டால், குறிப்பாகப் பெண்களின் மறைவுறுப்பை விட்டும் விலகிக்கொள்ளுங்கள் என்பதாகப் பொருள் வரும்.

விலகியிருக்க வேண்டும் என்பதாக இந்த வசனத்தில் சொல்லப் பட்டிருப்பது உடலுறவுகொள்வதை விட்டு மட்டும் விலகியிருக்க வேண்டும் என்பதாகும். மற்றபடி மாதவிடாய் வந்துள்ள பெண்

7

ஏழாவது பெரும்பாவம்

மனைவிக்குக் கொடுத்த மஹ்ர் – மணக்கொடையை அநியாயமாகப் பிடுங்கிக்கொள்வது

❄

மஹ்ர் மனைவிக்குரிய உரிமையாகும். அல்லாஹ் தன் வேதத்தில்,

وَآتُوا النِّسَاءَ صَدُقَاتِهِنَّ نِحْلَةً

நீங்கள் (திருமணம் செய்ய விரும்புகின்ற) பெண்களுக்கு அவர்களுடைய மஹ்ர்களை (மணக்கொடைகளை) மனமுவந்து கட்டாயமாகக் கொடுத்துவிடுங்கள் (4:4) என்பதாகக் கூறுகிறான்.

ஆகவே, மனைவியருக்குக் கொடுக்க வேண்டிய மஹ்ரைக் காலத் தாமதப்படுத்துவதோ குறைப்பதோ கூடாது. ஆயிஷா ﵂, உம்மு ஸலமா ﵂ ஆகிய இருவரும் கூறுகிறார்கள்: 'மனைவிக்கு மஹ்ர் கொடுப்பது அல்லது வேலை செய்தவருக்குக் கூலி கொடுப்பது ஆகியவற்றை (ஏமாற்றுவதை)விடக் கடுமையான எதுவும் இல்லை' (முஸன்னஃப் அபூ ஷைபா 17405) மனைவிக்குக் கொடுக்க வேண்டிய மஹ்ரை மோசடி செய்வது பெரும்பாவங்களில் ஒன்றாகும். அதுகுறித்து வந்துள்ள எச்சரிக்கைகளில் சில:

1. மஹ்ரை அபகரிப்பதால் மனைவியின்மீது அபாண்டமாகவும் வெளிப்படையாகவும் குற்றம் சுமத்த வேண்டியது ஏற்படும்

அல்லாஹ் தன் வேதத்தில் கூறுகிறான்:

وَإِنْ أَرَدْتُمُ اسْتِبْدَالَ زَوْجٍ مَكَانَ زَوْجٍ وَآتَيْتُمْ إِحْدَاهُنَّ قِنْطَارًا فَلَا تَأْخُذُوا مِنْهُ شَيْئًا أَتَأْخُذُونَهُ بُهْتَانًا وَإِثْمًا مُبِينًا

8

எட்டாவது பெரும்பாவம்

மார்க்கரீதியான எந்த தக்க காரணமும் அன்றி ஒரு பெண் தன் கணவனிடம் குல்உ வேண்டுவது – அவள் தன் பொருளைக் கொடுத்து விவாகரத்துக் கேட்பது; அல்லது வெறுமனே விவாகரத்துக் கேட்பது

❄

விவாகரத்தைப் பற்றிச் சில பெண்கள் இலகுவாக நினைக்கிறார்கள். சாதாரண, எதற்கும் உதவாத சில காரணங்களால் சில பெண்கள் விவாகரத்து வேண்டி நிற்கிறார்கள். ஏதேனும் ஒரு கருத்துவேறுபாடு, சிக்கல் போன்றவற்றுக்கெல்லாம் விவாகரத்துக் கேட்கிறார்கள். கணவனிடம் ஏற்படுகின்ற குறைகள் அவன் வேண்டுமென்றே செய்திருந்தாலும், தற்செயலாக நடந்திருந்தாலும் அவனிடம் விவாகரத்து வேண்டி நிற்கிறார்கள். இவ்வாறு நடந்துகொள்வது மார்க்கரீதியில் எந்தத் தடையும் இல்லை என நினைக்கிறார்கள்.

ஒரு முஸ்லிம் பெண் விவாகரத்துக் கேட்கும் முன் மார்க்கம் அனுமதித்துள்ள தக்க காரணத்தோடு அவள் விவாகரத்துக் கேட்கிறாளா என அறிய வேண்டும். மார்க்கரீதியான தக்க காரணம் இன்றி அவள் விவாகரத்து வேண்டி நின்றால் அது பெரும்பாவங்களில் ஒன்றேயாகும். இதுகுறித்து வந்துள்ள நபிமொழிகள் பின்வருமாறு:

1. அவளுக்குச் சொர்க்கத்தின் வாடை தடை செய்யப்பட்டுவிடும்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஸவ்பான் ؓ கூறுகிறார்கள்:

أَيُّمَا امْرَأَةٍ سَأَلَتْ زَوْجَهَا طَلَاقًا مِنْ غَيْرِ بَأْسٍ فَحَرَامٌ عَلَيْهَا رَائِحَةُ الْجَنَّةِ

12

பன்னிரண்டாவது பெரும்பாவம்

சூனியம் செய்வது

❄

சூனியம் செய்வது ஷைத்தானின் வேலையாகும். ஆகவே, இம்மையில் நற்பாக்கியம் பெறுவதையும் மறுமையில் ஈடேற்றம் பெறுவதையும் விரும்புகிற ஒவ்வொருவரும் சூனியத்தையும், சூனியம் செய்பவர்களையும் தவிர்ந்திருப்பது கட்டாயமாகும். ஏனெனில், மனிதன் தன் மார்க்கத்தையும் கொள்கையையும் சூனியத்திற்கு விலையாகக் கொடுக்க வேண்டியது ஏற்படும். நபி ﷺ அவர்கள் சூனியத்தைப் பற்றியும் சூனியம் செய்பவர்களைப் பற்றியும் தங்கள் சமுதாயத்திற்கு எச்சரிக்கை செய்துள்ளார்கள். மேலும், அது ஷிர்க் என்றும் குஃப்ரு என்றும் சூனியக்காரர்களை விட்டும் தாங்கள் பொறுப்பு நீங்கிக்கொண்டதாகவும் நபியவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஆகவே, தம்பதியர் சூனியத்திற்கும், சூனியக்காரர்களுக்கும் அடைக்கலம் கொடுக்காமல் எச்சரிக்கை யோடு இருப்பது அவசியமாகும். சில பிரச்சினைகளினால் மண வாழ்க்கையில் குந்தகம் ஏற்படும்போது தம்பதியர் இருவரும் நபியவர்களின் வழிகாட்டுதலை அவசியம் கடைப்பிடிக்க வேண் டும். ஏனெனில், நபி ﷺ அவர்களின் வழிகாட்டலில்தான் அனைத்து நன்மைகளும் அடங்கப் பெற்றுள்ளன.

சூனியத்தையும் சூனியக்காரர்களையும் எச்சரிக்கையூட்டிப் பல நபிமொழிகள் வந்துள்ளன. அவை பின்வருமாறு:

1. சூனியம் செய்பவன், சூனியம் செய்ய கேட்டுக் கொள்பவன் இருவரை விட்டும் நபி ﷺ அவர்கள் பொறுப்பு நீங்கிக்கொண்டார்கள்.

இம்றான் இப்னு ஹுஸைன் ﷺ அவர்கள் ஒரு நபிமொழியை அறிவிக்கிறார்கள்: